# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,  DHINATH DHALAM  Tamil & English daily Paper  நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 104 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 12.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


### பிரதமர் நரேந்திர மோடி, நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் முன்னிலையில்

## இந்தியா நியூசிலாந்து இடையே 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்து



ஆக்லாந்து: பிரதமர் நரேந்திர மோடி - நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் முன்னிலையில் இரு நாடுகள் இடையே பாதுகாப்பு, சுற்றுலா உட்பட 5 துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

பிரதமர் நரேந்திர மோடி இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக நேற்று நியூசிலாந்து சென்றார். அந்நாட்டு பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் அவரை விமான நிலையத்துக்கே சென்று ஆரத்தழுவி வரவேற்றார்.


இந்நிலையில், பிரதமர் மோடி – பிரதமர் லக்சன் இடையே தூதுக்குழு அளவிலான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இதையடுத்து, பாதுகாப்பு, கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம், சுற்றுலா, விளையாட்டு, பேரிடர் மேலாண்மை ஆகிய ஐந்து துறைகளில் முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இரு நாடுகளின் பாதுகாப்புத் துறைகளுக்கு இடையே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம் தொடர்பான ஆராய்ச்சி,புத்தாக்கம், சிறந்த நடைமுறைகளை பரிமாறிக் கொள்ளுதல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் நோக்கில் இத்துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. மேலும், சுற்றுலா பயணிகள் வருகையை அதிகரிக்கவும், பயணத்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் சுற்றுலாத் துறை புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விளையாட்டு வீரர்களின் பரிமாற்றம், விளையாட்டு மேம்பாடு ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் விளையாட்டுத்துறைசார்ந்த கூட்டு செயல் திட்டத்தை இரு தரப்பினரும்ஏற்றுக்கொண்டனர். பேரிடர் தயார்நிலை, அவசரகால நடவடிக்கை, பேரிடரை எதிர்கொள்ளும் திறன் ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் பேரிடர் மேலாண்மை துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஐந்து ஒப்பந்தங்களும் இந்தியா – நியூசிலாந்து இடையே வளர்ந்து வரும் கூட்டாண்மையையும், பொருளாதாரம் மற்றும் மக்கள் நலன் சார்ந்த துறைகளில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான இரு நாடுகளின் அர்ப்பணிப்பையும் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

## வியட்நாமில் படகு கவிழ்ந்து 15 இந்திய சுற்றுலாப் பயணிகள் உயிரிழப்பு



தெற்கு வியட்நாமில் தீவுப் பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பியபோது சுற்றுலாப் படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்கு ள்ளானதில் படகில் இருந்த இந்திய சுற்றுலாப் பயணிகளில் 15 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. வியட்நாமின் மிகப் பெரிய தீவான பு குவோக் அருகே உள்ள ஹான் மே ரூட் ங்வோய் தீவில் இருந்து சுமார் 400 மீட்டர் தொலைவில் படகு கவிழ்ந்து விபத்துக்கு ள்ளானது. படகில் 32 இந்திய சுற்றுலாப் பயணிகளும்,4 பணியாளர்களும் இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எல்லை பாதுகாப்புப் படை, கடற்படை, கடலோர காவல் படை ஆகியவை மீட்புப் பணியில் இணைவதற்கு முன்பே அப்பகுதியில் இருந்த மற்ற படகுகளில் இருந்தவர்கள், பாதிக்கப்பட்ட பயணிகளை நீரில் இருந்து மீட்டதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதியில் பெரிய அலைகள் இருந்ததாலும், பலர் படகுக்குள் சிக்கிக்கொண்டதாலும் மீட்புப் பணி சவாலாக இருந்ததாகவியட்நாமின் 'விஎன் எக்ஸ்பிரஸ்' செய்தி வெளியிட்டுள்ளது. உயிருடன் மீட்கப்பட்டவர்களின் சரியான எண்ணிக்கையை அதிகாரிகள் உறுதிப்படுத்திக் கொண்டிருப்பதாக ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் மாகாண அதிகாரி நுயென் டியென் ஹை தெரிவித்துள்ளார்.

பலத்த காற்று, பெரிய அலைகள் ஆகியவை காரணமாகவே படகு கவிழ்ந்திருக்கலாம் என்று ஆரம்பகட்டத் தகவல்கள் தெரிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து குறித்து உறுதிப்படுத்தி உள்ள வியட்நாமில் உள்ள இந்திய தூதரகம், உயிரிழந்தவர்கள் குறித்த விவரங்களை வழங்கவில்லை. இது தொடர்பாக இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், 'பல இந்திய சுற்றுலாப் பயணிகள் பயணித்த படகு ஒன்று, வியட்நாமின் பு குவோக் தீவு அருகே கவிழ்ந்து விபத்துக்குள்ளான துயர சம்பவம் நடந்துள்ளது.

தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதால் சம்பவம் குறித்ததுல்லிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தகவல்களையும உதவிகளையும் வழங்க இந்திய தூதரகத்தில் ஒரு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. இதனை, +84 36 281 7930, +84 91 552 37 14 and +84 33 452 0414 ஆகிய எண்களில் தொடர்புகொள்ளலாம்.

ஹனேயிலும ஒரு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. இதனை +84 91 308 9165 என்றஎண்ணில்தொடர்பு கொள்ளலாம். எந்தவொரு உதவிக்கும் அல்லது சந்தேகங்களுக்கும் உதவ நாங்கள் தயாராக உள்ளோம்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |


தொடர்புக்கு : ☎ +919444082959


## இரும்பு வியாபாரி வீட்டில் ரூ.8 கோடி ரொக்கம் பறிமுதல்: ஜிஎஸ்டி புலனாய்வு பிரிவு அதிகாரிகள் விசாரணை

ஈரோடு:

பெருந்துறை அருகே ஈங்கூரில்பழையஇரும்பு வியாபாரி வீட்டில் ரூ.8 கோடி ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது. ஜிஎஸ்டி, வருமான வரி கட்டாதது குறித்து வியாபாரியிடம் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறைஅருகேஈங்கூர்எல்லைமேடு பகுதியில் பழைய இரும்பு வியாபாரம் செய்து வருபவர் செல்வகுமார். இவர், கடந்த 6 ஆண்டுகளாக ஜிஎஸ்டி மற்றும் வருமானவரிசெலுத்தாமல் வியாபாரம் செய்து வந்ததாகக் கூறப்படுகிறது. அதிகாரிகள் விளக்கம் கேட்டும், செல்வக்குமார் தரப்பில் இருந்து விளக்கம் அளிக்கப்படவில்லை.



இதையடுத்து, நேற்று முன் தினம் கோவையில் இருந்து வந்த ஜிஎஸ்டி புலனாய்வுப் பிரிவு இணை இயக்குநர் அஸ்வத் பாஜி தலைமையில், செல்வக்குமாரின் வீடு மற்றும் தொடர்புடைய இடங்களில் ஜிஎஸ்டி புலனாய்வு அதிகாரிகளும், வருமான வரித்துறை அதிகாரிகளும் தீவிர சோதனை நடத்தினர்.

இதற்கிடையே, அதிகாரிகள் சோதனைக்காக வருவதை அறிந்த செல்வகுமார், உடல்நலக் குறைவு ஏற்பட்டதாகக் கூறி பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றுவிட்டார். அதைத்தொடர்ந்து, வருமானவரித் துறை உயரதிகாரிகள் முன்னிலையில் நேற்று முன்தினம் அவரது வீட்டின் பூட்டை திறந்து அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

இதில், ரூ.8 கோடி ரொக்கம் கைப்பற்றப்பட்டது. இப்பணத்தின் மூலாதாரம், ஜிஎஸ்டி ஏய்ப்பு தொடர்பான குற்றச்சாட்டுகள் மற்றும் பணப் பரிவர்த்தனைகள் குறித்து செல்வக்குமாரிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

தினத்தளம் தினசரி காலை நாளிதழ் 12.07.2026



தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் எஸ்.சி. (SC) துறை மாநிலத் தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார்அவர்களிடம்,ஈரோடு மாநகர்மாவட்டத்தலைவராகப்புதிதாகநியமிக்கப்பட்டுள்ள பிரபு நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது, தனது புதிய பதவிக்கான அதிகாரப்பூர்வ நியமனக் கடிதத்தை அவர் மாநிலத் தலைவர் எம்.பி.ரஞ்சன் குமாரிடம் பெற்றுக் கொண்டார்.

# மாணவர்களுக்கான சிறப்பு குறைதீர்நாள் கூட்டம் கலெக்டர் கந்தசாமி தகவல்



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு

ஈரோடு மாவட்டத்தில் 2025-2026 ஆம் கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற / தேர்ச்சி பெறாத மற்றும் தேர்வு எழுதாத மாணவர்கள் மற்றும் 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று உயர்கல்வி தொடராத / தேர்ச்சி பெறாத மற்றும் தேர்வு எழுதாதவர்கள் என அனைத்து மாணவர்களும் 100 சதவிகிதம் உயர்கல்வியில் சேர்வதை உறுதி செய்யும் வகையில் மாணவர்களுக்கான சிறப்பு குறைதீர்நாள் கூட்டம் வருகின்ற 2026 ஜீலை 14 செவ்வாய் கிழமை (14.07.2026) காலை 11.00 முதல் மதியம் 1.00 வரை ஈரோடு,ஈரோடு,மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

பெற்றோர்/பாதுகாவலருடன் எனவே மாணவ,மாணவியர்கள் தங்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உயர்கல்வியில் சேர்வதற்கு தேவையான சான்றிதழ்கள், வழிகாட்டுதல்கள், பள்ளி / கல்லூரிச்சேர்க்கை, விடுதி வசதி மற்றும் கல்விக்கடன் ஆகிய தேவைகள் குறித்து மாணவர்கள் மனுக்களாக அளித்து பயனடையும் வகையில் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆரோக்கியமான கோவை எனும் தலைப்பில் சுகாதார விழிப்புணர்வு திட்டத்தை

# கோவை ஆர்.எஸ்.புரத்தில், கேலக்ஸி ஹெல்த் இன்சூரன்ஸ் ரோட்டரி கிளப் ஆஃப் கோயம்புத்தூர் ஸ்வஸ்திக் மற்றும் ஸ்வஸ்திக் அறக்கட்டளை இணைந்து நடத்தியது



கோவை மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில்,கேலக்ஸி ஹெல்த் இன்சூரன்ஸ், ரோட்டரி கிளப் ஆஃப் கோயம்புத்தூர் ஸ்வஸ்திக் மற்றும் ஸ்வஸ்திக் அறக்கட்டளை இணைந்து ஆரோக்கியமான கோவை என்ற சுகாதார விழிப்புணர்வு திட்டத்தை கோவை ஆர்.எஸ்.புரத்தில், உள்ள கேலக்ஸி ஹெல்த் இன்சூரன்ஸ் அலுவலகத்தில் தொடங்கி வைத்தனர்.

இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம், 2026-27 ரோட்டரி ஆண்டில் கோயம்புத்தூரின் பல்வேறு பகுதிகளில் தினமும் இலவச உடல்நலப் பரிசோதனை முகாம்களை நடத்தி, பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கை மருத்துவ பரிசோதனைகளை எளிதில் கிடைக்கச் செய்வதும், வாழ்க்கை முறை நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுமாகும். இந்த முகாம்களில் இரத்த அழுத்தம், இரத்த சர்க்கரை அளவு, உடல் நிறை குறியீடு இடுப்பு சுற்றளவு, நாடித்துடிப்பு, ஆக்சிஜன் அளவு உள்ளிட்ட பரிசோதனைகள் இலவசமாக மேற்கொள்ளப்படுவதுடன், கேலக்ஸி ஹெல்த் ஸ்கோர் வழங்கப்பட்டு, ஒவ்வொருவரின் உடல்நல நிலை மதிப்பீடு செய்யப்படும்.

இந்நிகழ்ச்சியில் கேலக்ஸி ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைசெயல் அதிகாரி ஜி. ஸ்ரீனிவாசன், தலைமை விற்பனை அதிகாரி எஸ். குருபிரகாஷ், மனித வளம் மற்றும் நிர்வாகப் பிரிவுத் தலைவர் பி.எஸ்.டி. ஷா, மண்டலத் தலைவர்ஏ.வி.எம். ஜான் ஆகியோர் கலந்து கொண்டனர்.


ரோட்டரி மாவட்டம் 3206 சார்பில் 2026-27 மாவட்ட ஆளுநர் ரோட்டேரியன் ஆர். எஸ். மாருதி மற்றும் உதவி மாவட்ட ஆளுநர்ரோட்டேரியன்பிரபு சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர்.

ரோட்டரி கிளப் ஆஃப் கோயம்புத்தூர் ஸ்வஸ்திக் சார்பில் தலைவர் ரோட்டேரியன் வி. வினோத்குமார், செயலாளர் ரோட்டேரியன் என். புருஷோத்தமன், ரோட்டேரியன் சதீஷ் எம்.எம்.எஸ். ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஸ்வஸ்திக்அறக்கட்டளை சார்பில் அஜய் கலந்து கொண்டு இந்த சமூகநல முயற்சிக்கு தனது ஆதரவைத் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய சிறப்பு விருந்தினர்கள், "நோய் வந்த பிறகு சிகிச்சை பெறுவதை விட, நோய் வராமல் தடுப்பதேசிறந்தமருத்துவம்" என்பதை வலியுறுத்தினர். ஆண்டு முழுவதும் நடைபெறவுள்ள இந்த தினசரி இலவச சுகாதார முகாம்கள் ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு பயனளிக்கும் என்றும், ஆரோக்கியமான வாழ்க்கை முறையை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றும் என்றும் தெரிவித்தனர்

# திமிரியில் அழகுமுத்துக்கோனின் 269வது குருபூஜை விழா விமரிசையாக நடைபெற்றது



ராணிப்பேட்டை மாவட்டம், திமிரி பேரூராட்சியில் யாதவர் மகா சபை சார்பில் சுதந்திரப் போராட்ட வீரர் அழகுமுத்துக்கோனின் 269வது குருபூஜை விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

திமிரி யாதவர் மகா சபை பொறுப்பாளர்கள் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்ச்சியில் மாநில பொதுச் செயலாளர் சேது மாதவன் மாநிலத் துணைசெயலாளர் ஜவகர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, சுதந்திரப் போராட்ட வீரர் அழகுமுத்துக்கோனின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற வட்டாட்சியர் ராஜசேகர், ஆட்டோ கண்ணன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர். மேலும், திமிரி மற்றும் சுற்று வட்டாரபகுதிகளைச்சேர்ந்த யாதவர்சமுதாயப்பெருமக்கள் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். நிறைவாக கலந்து கொண்ட பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த குருபூஜை விழா சமூக ஒற்றுமை மற்றும் சுதந்திரப் தியாகத்தை நினைவுகூ ரும் வகையில்சிறப்பாகநடைபெற்றது.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில், உலக மக்கள் தொகை தினம் 2026ஐ முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சுபோட்டி மற்றும் கட்டுரை போட்டியில் வெற்றி பெற்ற மாணவ,மாணவியர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்த குமார் நேற்று (11.07.2026) வழங்கினார்.

## ஊத்தங்கரை அடுத்த சாமல்பட்டியில்

# சுதந்திர போராட்ட தியாகி மாவீரன் அழகுமுத்துகோனின் 269 குரு பூஜை விழா



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த சாமல்பட்டி பேருந்து நிறுத்தம் பகுதியில் சுதந்திர போராட்ட தியாகி அழகு முத்துகோன் அவர்களின் 269 வது குருபூஜை விழா நடைபெற்றது,நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு யாதவ மகாசபை மாவட்ட தலைவர் ஹீண்டாய் ரவி தலைமை தாங்கினார்,மாவட்ட இளைஞர் அணிசெயலாளர்

டி.ஹரிஷ் யாதவ் வரவேற்புரை ஆற்றினார்,இதில் யாதவ மகா சபை கெளரவ தலைவர் ஜிம்,எம் சக்திவேல்,கிழக்கு மாவட்ட செயலாளர் சி,ராஜியாதவ்,கிழக்கு மாவட்ட மண்டல பொறுப்பாளர் சி,கோவிந்தராஜ், அதிமுக மத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நரேஷ் யாதவ்,சி,அன்பு,பாஜக சுற்று சூழல் மாவட்ட அமைப்பாளர் பிரபு,தமிழகவெற்றிகழக மாவட்ட இணை செயலாளர் தாமோதரன்,தவெக தெற்கு ஒன்றிய செயலாளர் திருமூர்த்தி,திருநாவுக்கரசர்,குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்,நிகழ்ச்சியில் அலங்கரிக்கப்பட்ட தியாகி அழகு முத்துகோன் அவர்களின் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தனர்,பிறகு பொதுமக்களுக்கு அன்னதானம்,மர கன்றுகள் வழங்கப்பட்டன,விழாவில் கலந்து கொண்டவர்களுக்குநினைவு பரிசுகள் வழங்கப்பட்டன,சிறப்பு அழைப்பாளராக பூவரசன், சக்திவேல்,மணி,மைக்கேல்,சந்தோஷ்,பூவரசன்,

இதில் யாதவ மகாசபை இளைஞர் அணி நிர்வாகிகள் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்,

# கோவை மாநகராட்சி பள்ளி மாணவிகளுக்காக சானிட்டரி நாப்கின் எரிப்பு இயந்திரம் நிறுவிய உலக பிராமணர் நலமன்றம்



கோவை மாவட்டம் கோவில் மேடு மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவிகளின் சுகாதார நலனை மேம்படுத்தும் நோக்கில், உலக பிராமணர் நல மன்றம் சார்பில் சானிட்டரி நாப்கின் எரிப்பு இயந்திரம் நிறுவப்பட்டு, அவை மாணவிகள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

பள்ளித் தலைமை ஆசிரியர் கீதா மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில்,உலகபிராமணர் நல மன்றத்தின் தலைவர் சி.வி. கிருஷ்ணமூர்த்தி, துணைத் தலைவர் ஆர்.எல்.என். சிவக்குமார், செயலாளர் ஆர். ராஜ்மோகன் ஆகியோர் ரிப்பன் வெட்டி இயந்திரத்தை திறந்து வைத்தனர்.

நிகழ்ச்சிக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய உலக பிராமணர் நல மன்றத்தின் தலைவர் சி.வி. கிருஷ்ணமூர்த்தி, சமூகப் பொறுப்புணர்வு பணிகளின் ஒரு பகுதியாக மாணவிகளின் சுகாதாரவசதியைமேம்படுத்தும் நோக்கில் இந்த சானிட்டரி நாப்கின் எரிப்பு இயந்திரம் நிறுவப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், இப்பள்ளியில் பயிலும் ஒற்றைப் பெற்றோர் குடும்பங்களைச் சேர்ந்த 21 மாணவ, மாணவியருக்கு பள்ளிச் சீருடைகள் மற்றும் பள்ளிப் பைகள் வழங்கப்பட்டதாகவும், கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக நலன் சார்ந்த சேவைகளை எதிர்காலத்திலும் தொடர்ந்து மேற்கொள்ள உலக பிராமணர் நல மன்றம் உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மன்றத்தின் பொருளாளர் கோவிந்தகிருஷ்ணன், ஆலோசகர் நடராஜன், குழு உறுப்பினர் டாக்டர் சுப்பிரமணியம் உள்ளிட்ட நிர்வாகிகள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும்பலர்கலந்துகொண்டனர்என்பதுகுறிப்பிடத்தக்கது



உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு உறுதிமொழி ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில், அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் செவிலியர்கள் மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்த குமார் தலைமையில் நேற்று (11.07.2026) விழிப்புணர்வு ஏற்றுக்கொண்டனர்.

# கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள குமரகுரு கல்லூரியில், பள்ளி மாணவர்களுக்கான மாதிரி நாடாளுமன்ற நிகழ்ச்சி நடைபெற்றது

## சிறப்பு விருந்தினராக கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர் கலந்து கொண்டு துவங்கி வைத்தார்



இளம் தலைமுறையினரிடம் ஜனநாயக விழிப்புணர்வு, குடிமைப் பொறுப்பு மற்றும் தலைமைத்துவ பண்புகளை வளர்க்கும் நோக்கில், சிஐஐ மற்றும் யங் இந்தியன்ஸ் இணைந்து, "யங் இந்தியன்ஸ் நாடாளுமன்றம் 3.0" நிகழ்ச்சியை கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள குமரகுரு கல்லூரி வளாகத்தில் நடத்தியது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாதிரி நாடாளுமன்ற நிகழ்ச்சியில், கோவை மற்றும் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த 14 பள்ளிகளில் இருந்து 109 மாணவர் பிரதிநிதிகள் பங்கேற்று, இந்திய நாடாளுமன்றத்தின் செயல்பாடுகளின் விவாதங்கள், சட்டமசோதா கலந்துரையாடல்கள் மற்றும் கொள்கை வடிவமைப்பு அமர்வுகளில் பங்கேற்கின்றனர்.

இந்த நிகழ்ச்சியை கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் ஜி. கிரியப்பனவர், தொடங்கி வைத்தார். குமரகுரு பொது மற்றும் போட்டித் தேர்வு மையம், குமரகுரு பன்முக கலை மற்றும் அறிவியல் கல்லூரி அரசியல் அறிவியல் துறை மற்றும் யங் இந்தியன்ஸ் கோவை கிளை இணைந்து இந்த நிகழ்ச்சியை நடத்தியது.

இந்த போட்டியில் சிறப்பாக செயல்படும் 15 மாணவர்கள் பிராந்திய சுற்றுக்கு தகுதி பெற்று, பின்னர் புதுதில்லியில் நடைபெறும் தேசிய இறுதிப்போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெறுவர். நாளை நடைபெறும் நிறைவு விழாவில் கோவை மக்களவை உறுப்பினர் டாக்டர் கணபதி ராஜ்குமார் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ள உள்ளார்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய மாவட்ட ஆட்சியர் பவன்குமார் ஜி. கிரியப்பனவர், இந்திய அரசியலமைப்பின் மிக முக்கியமான தூண் நாடாளுமன்றம் என்றும், எதிர்கால தலைவர்களாக உருவாக மாணவர்கள் கேட்கும் திறன், பொறுமை, பரஸ்பர மரியாதை மற்றும் பச்சாதாப உணர்வு ஆகியவற்றை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில், யங் இந்தியன்ஸ் கோவை கிளை தலைவர் ராகுல் காமத், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோவை சிவாஜி காலனி பகுதியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக

# கோவை சிவாஜி காலனியில் உள்ள முத்து மாரியம்மன் திருக்கோவிலில் இந்துமத முறைப்படி திருமணம் நடைபெற்றது



கோவை சிவாஜி காலனி பகுதியில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டல அலுவலகம் அமைந்துள்ளது. இக்கட்சியின் மாநில துணை தலைவராக வழக்கறிஞர் புஸ்பாணந்தம் இருந்து வருகின்றார்.

இவரது தலைமையில் கோவை சிவாஜி காலனியில் உள்ள முத்து மாரியம்மன் திருக்கோவிலில் இந்து முறைப்படி திருமணம் நடைபெற்றது. திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்தவர் சிவா என்ற 29,

வயதான இளைஞருக்கும், புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த கரணியா என்ற 21 வயது பெண்ணுக்கும், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக, இக்கட்சியின் மாநில துணைத் தலைவர் வழக்கறிஞர் புஸ்பானந்தம் தலைமையில் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. இருவரும் கடந்த 5 ஆண்டுகளாக காதலித்து வந்த நிலையில், இருவரும் வேறு, வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள். இதனால் அவர்களது திருமணம் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டு வந்தது. இந்த நிலையில் வழக்கறிஞர் புஸ்பாணந்தம் தலைமையில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. இந்து முறைப்படி தாலி கட்டி திருமணம் செய்து கொண்டனர்.

தொடர்ந்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கபட்டது. இந்த திருமண நிகழ்ச்சியில், மணமகனின் தாய், புஷ்பராணி, தந்தை நாகநாதன், மணமகளின் உறவினர்கள் மற்றும் பிரமீளா,தர்மராஜ்,கண்ணன், உமேஸ்வரி, மலுமிச்சம்பட்டி திமுக கவுன்சிலர் மணிக்குட்டி, குமாஸ்தாக்கள் லட்சுமி, திவ்யா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். என்பது குறிப்பிட த்தக்கது.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில், உலக மக்கள் தொகை தினம் 2026ஐ முன்னிட்டு விழிப்புணர்வு ரதத்தினை மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்த குமார் நேற்று (11.07.2026) துவக்கி வைத்தார்.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை, சக்தி திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் மனுக்கள் பெறும் முகாமில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் கைத்தறி,துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய்பாலாஜி ஆகியோர் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை நேற்று (11.07.2026) வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் முத்துசாமி உட்பட் பலர் உள்ளனர்.


# சங்கரன்கோவிலில், நகராட்சி முன்பு விசைத்தறி தொழிலாளர்கள் போராட்டம்



சங்கரன்கோவிலில் 20 சாயப்பட்டறை கழிவுநீர் மையத்தை மாசு கட்டுப்பாட்டு வாரியம் மூட உத்தரவிட்டது. இந்நிலையில் எந்த முன்னறிவிப்பும் இன்றி 10.07.2026 அன்று கரண்ட் கட் செய்ததால் விசைத்தறி தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் சுமார் 2000-க்கும் மேற்பட்ட விசைத்தறி கூடங்கள் உள்ளன. இதில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர்.

இந்நிலையில் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் உத்தரவின் பேரில் 10.07.2026 அன்று மதியம் திடீரென பல்வேறு விசைத்தறி கூடங்களின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. முறையான நோட்டீஸ் வழங்காமல் கரண்டை துண்டித்ததால் ஆயிரக்கணக்கான தறிகள் முடங்கின. இதனால் வேலை இழந்த தொழிலாளர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டன. இதனால் விசைத்தறி தொழிலாளர்கள் மற்றும் உரிமையாளர்கள் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தவறான போக்கை கண்டித்து நகராட்சி அலுவலகம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர் தகவலறிந்து வந்த காவல்துறை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். மேலும் தொழிலாளர்கள் அனைவரும் நகராட்சியிலிருந்து நடந்து சென்று சங்கரன்கோவில் கோட்டாட்சியர் கோரிக்கைகள் அடங்கிய மனுவை கோட்டாட்சியரிடம் அளித்தனர். கோட்டாட்சியர் முறையாக விசாரணை செய்து ஒத்துழைப்பு கொடுப்பதாக கூறியதை அடுத்து அனைவரும் கலைந்து சென்றனர்.

மேலும் விசைத்தறி தொழிலாளர்கள் கூறுகையில்:சங்கரன்கோவிலில் பிரதானத் தொழில் விசைத்தறி மட்டுமே. இதை நம்பி பல்வேறு குடும்பங்களின் வாழ்வாதாரங்கள் இருக்கின்றன. அரசாங்கம் முறையான சாயக்கழிவுகள் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டும் எனவும், அது நிறைவேறும் வரை கால வாசம் வேண்டும் எனவும், அவ்வாறு கால அவகாசம் இருந்தால் மட்டுமே தொடர்ந்து விசைதறி தொழில் இயங்கும் எனவும் தெரிவித்தனர்.



மதுரை மாநகர் மாவட்டம் சின்னக்கண்மாய் பகுதியில் உள்ள வி த லீடர்ஸ் மற்றும் ஓம் சரவணபவ திருமுருகன் நடுநிலைப்பள்ளி சார்பாக மோதி விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. மகா.சுசீந்திரன் தலைமையில் நடைபெற்ற இப்பேரணி பள்ளியிலிருந்து துவங்கி சின்னகண்மாய் கீழ்மதுரை கேட்லாக் ரோடு வரை சென்றது. இப்பேரணியில் பள்ளி மாணவ மாணவிகள் போதைக்கு எதிரான விழிப்புணர் பதாகைகளை ஏந்தியபடி பேரணியாக சென்று பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர். தொடர்ந்து பள்ளி மாணவ மாணவிகளுக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டது இந்நிகழ்வில் வி த லிடர்ஸ் தெற்கு தொகுதி நிர்வாகிகள் இருளமூர்த்தி அருண்குமார் அரியவேல் முருகன் மணிகண்டன் கோடீஸ்வரன் நாகராஜ் விஸ்வநாதன் மணிகண்டன் ஈஸ்வரன் பிரியங்கா மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் சரவணன் ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்



ஈரோடு மாவட்டம், பெருந்துறை, சக்தி திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் மனுக்கள் பெறும் முகாமில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஆகியோர் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை நேற்று (11.07.2026)பெற்று, குறைகளை கேட்டறிந்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் முத்துசாமி உட்பட் பலர் உள்ளனர்.

# ஆனி கிருத்திகை விழா: நல்லூர் வில்வனேஸ்வரர் கோவிலில் சிறப்பு அபிஷேகம் - பக்தர்களுக்கு அன்னதானம்





கடலூர் மாவட்டம், வேப்பூர் அருகே உள்ள நல்லூர் அருள்மிகு ஸ்ரீ வில்வனேஸ்வரர் திருக்கோவிலில் வடதிசை நோக்கி அருள்பாலிக்கும் முருகப்பெருமானுக்கு ஆனி கிருத்திகையை முன்னிட்டு சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாராதனை வெகுவிமரிசையாக நடைபெற்றது.

நடைபெற்ற அன்னதான நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட தமிழக வெற்றிக் கழகத்தின் கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எருமனூர் EMR.S.விஜய், பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கி விழாவை சிறப்பித்தார். நிகழ்ச்சிக்கு நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.பி. செல்வமணி தலைமை தாங்கினார். விழா ஏற்பாடுகளை பி.எஸ்.வி. பஹ்ரைன் பாலமுருகன் சிறப்பாக செய்திருந்தார்.

இந்த நிகழ்வில் கட்சியின் மாவட்ட, ஒன்றிய மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்து அன்னதானத்தில் பங்கேற்றனர்.

# ஈரோடு காங்கிரஸ் எஸ்.சி. பிரிவுக்கு புதிய தலைவர் நியமனம்



தமிழ்நாடு காங்கிரஸ் எஸ்.சி துறை மாநில தலைவர் எம்.பி. ரஞ்சன் குமார், ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் எஸ்.சி பிரிவு தலைவராக ஐ. பிரபு அவர்களை நியமித்தார்.

இதையொட்டி இன்று ஈரோடு ஜவஹர் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வில், ஐ.பிரபு ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பா.ராஜேஷ் ராஜப்பா அவர்களை சந்தித்து பொன்னாடை போர்த்தி வாழ்த்துக்களை பெற்றார்.

நிகழ்வில் முன்னாள் மாவட்ட தலைவர்களான டி. திருசெல்வம், ஈ.பி. ரவி, தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ் (டி. சி டி.யூ) மாநில துணைத் தலைவர் குளம் எம். ராஜேந்திரன், மாவட்டத் துணைத் தலைவர் கே.எஸ். செல்வம், நெசவாளர் அணி மாவட்ட தலைவர் சி. மாரிமுத்து, ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடக பிரிவு தலைவர் ம. முகமது அர்சத், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவர் கே.என். பாஷா, முன்னாள் கவுன்சிலர் கை. சுப்பிரமணியம், மாவட்ட நிர்வாகிகளான ராஜாஜிபுரம் சிவா, பி குமரேசன் மற்றும் சங்கர், அன்பரசு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



மதுரை மாவட்டம், மேற்கு வட்டம், கீழக்குயில்குடி கிராமத்தில் அமைந்துள்ள சமணர் மலையில்சுற்றுலாப்பயணிகள்மற்றும்பொதுமக்கள்பயன்பெறும்வகையில்மேற்கொள்ள வேண்டிய அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து நேரில் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, சமணர் மலைக்குச் செல்லும் பாதையில் பேவர் பிளாக்சாலை அமைத்தல், போதுமான மின்விளக்கு வசதிகள் ஏற்படுத்துதல், மலையேறும் பாதைகளில் பாதுகாப்பு கருதி கைப்பிடி தடுப்புகள் (Hand Rails) அமைத்தல் உள்ளிட்ட பணிகளை விரைந்து மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.சித்தார்த் போகர்னா, இ.ஆ.ப., அவர்கள் உடன் உள்ளார்



### கோவை துடியலூர் அடுத்த வட்டமலைபாளையம் பகுதியில் உள்ள

# ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியில் "ஆரோக்கியமான எதிர்காலத்திற்கான மாரத்தான்" போட்டி

## துடியலூர் காவல் ஆய்வாளர் கொடியசைத்து துவக்கி வைத்தார்

கோவை துடியலூர் அடுத்துள்ள வட்டமலைப்பாளையத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர் மாநகரக் காவல் துறை, துடியலூர் காவல் நிலையத்துடன் இணைந்து "ஆரோக்கியமான எதிர்காலத்திற்கான மாரத்தான் - நல்ல வாழ்விற்காக அனைவரும் ஓடுவோம்" என்ற விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை சிறப்பாக நடத்தியது.

இந்த மாரத்தான் போட்டி கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இருந்து தொடங்கியது.

இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக கோவை மாவட்டம் துடியலூர் காவல் ஆய்வாளர் விவேகனந்தன் கலந்து கொண்டு மாரத்தான் போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்தார். மேலும், கல்லூரியின் தலைமைச் செயல் அதிகாரி சி.வி. ராம்குமார், தலைமை நிர்வாக அதிகாரி டி. மகேஷ் குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று மாணவர்களை ஊக்குவித்தனர்.

கல்லூரி முதல்வர் சௌந்தரராஜன் முன்னிலை வகித்தார். இந்த மாரத்தானில் எஸ். என். ஆர். சன்ஸ் சாரிட்டபிள் டிரஸ்டின் கீழ் இயங்கும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவ-மாணவிகள், முன்னாள் மாணவர்கள் என மொத்தம் 1,500-க்கும் மேற்பட்டோர் உற்சாகமாக பங்கேற்றனர்.

பங்கேற்பாளர்களுக்காக 3 கிலோமீட்டர் மற்றும் 5 கிலோமீட்டர் என இரண்டு பிரிவுகளில் மாரத்தான் போட்டிகள் நடத்தப்பட்டன. உடல்நலம், உடற்பயிற்சியின் அவசியம் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை அனைவரிடமும் கொண்டு சேர்க்கும் நோக்கத்துடன் இந்த மாரத்தான் போட்டி நடைபெற்றது.

மாரத்தானில் பங்கேற்ற அனைவரும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்ற வேண்டும் என்ற உறுதிமொழியை ஏற்று உற்சாகத்துடன் ஓடி, நிகழ்ச்சியை வெற்றிகரமாக நிறைவு செய்தனர். வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தினர், கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் நித்தியானந்தன் உள்ளிட்டவர்கள் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சுதந்திரப்போராட்ட வீரர் அழகு முத்துக்கோனின் 269வது பிறந்தநாள்:

# அரக்கோணத்தில் அமைச்சர் காந்திராஜ் மரியாதை செலுத்தினார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்ற பிரம்மாண்ட ஊர்வலம்





சுதந்திரப் போராட்ட வீரர் அழகு முத்துக்கோனின் 269வது பிறந்தநாளைமுன்னிட்டு ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் நடைபெற்ற விழாவில், தமிழககூட்டுறவுத்துறை அமைச்சர் வ. காந்திராஜ் கலந்துகொண்டுஅவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அரக்கோணம் எஸ். ஆர். கேட் பகுதியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அழகு முத்துக்கோனின் திருவுருவப் படத்திற்கு அமைச்சர் அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து, யாதவ சமுதாயத்தினர் ஏற்பாடு செய்திருந்தபிரம்மாண்ட ஊர்வலத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த ஊர்வலத்தில் ஆண்கள் இருசக்கர வாகனங்களிலும், பெண்கள் நடைபயணமாகவும் உற்சாகமாக பங்கேற்றனர். எஸ்.ஆர். கேட்டில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் பழனிப்பேட்டை, மார்க்கெட் ரோடு, பழைய பேருந்து நிலையம் உள்ளிட்ட முக்கிய சாலைகள் வழியாக சென்று சுவால்பே ட்டை பிள்ளையார் கோயில் அருகே நிறைவடைந்தது. பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட யாதவ சமுதாயத்தினர் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சுதந்திரப் போராட்ட வீரர் அழகு முத்துக்கோனுக்கு மரியாதை செலுத்தினர்.

# Highway blocked for 12 hours, stones pelted: Major protest by BJP leader Narottam Mishra's supporters over poll ticket

*Supporters of former Madhya Pradesh home minister and BJP leader Narottam Mishra held protests on Friday and Saturday over the ruling party's decision to nominate Ashutosh Tiwari as its candidate for the upcoming Datia assembly bypoll, replacing Mishra, who had contested and lost the seat in 2023.*

*Congress leader Rajendra Bharti had defeated Mishra, who was the state's home minister at the time, by more than 7,500 votes in the 2023 assembly elections.*

*However, in April this year, a Delhi court sentenced Bharti to three years in prison in a cheating case, resulting in his disqualification as an MLA and leading to a byelection. He was later granted bail.*

*Protest over no ticket to Narottam Mishra*

*The decision to field Tiwari for the bypoll came as a major disappointment for Mishra, who was expecting to be chosen as the candidate and had already bought a nomination form, news agency PTI reported, quoting party sources.*



*More than 3,000 protesters blocked NH-44 for nearly 12 hours, leaving the Datia superintendent of police and several other police personnel injured before security forces removed the protesters and detained some of them, officials told the news agency.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.